175597

Q23:38·21mp
N43
175597

உ

சிவகுகமயம்.

# முத்துப்பேட்டைத் தல வரலாறு.

8 NOV 1943
MADRAS

இயற்றியவர் :

**வித்வான் S. தெண்டபாணி தேசிகர்,**

*போர்டு உயர்தர பாடசாலை தமிழ் ஆசிரியர்,*

திருவாரூர்.

ஸ்ரீ வெங்கடேச்வர் பவர் பிரிண்டிங் ஓர்க்ஸ்,

கும்பகோணம்.

**1943.**

Q23:38·211 MP
N43
126592

## பதிப்புரை

இச்சிறு நூல் வழிபட வரும் அன்பர்களின் வசதிக்காக ஆக்கப்பெற்றது. இந்நூலை வகுக்கும் வழிகாட்டியவர்கள், தமிழ்ப் பேரறிஞரும், கல் வெட்டாராய்ச்சியில் சரித்திர உண்மைகளைப் புதுக்கி வருபவர்களும் ஆகிய எமது இந்துமத அறநிலையப் பாது காப்பாளர் உயர்திரு ராவ்பகதூர் C. M. இராமச்சந்திரம் செட்டியார் அவர்கள் ஆவார்கள். அவர்களுக்கும் எழுதித்தந்த அறிஞர்க்கும் எங்கள் நன்றியுரித்தாகுக.

இங்ஙனம்,

முத்துப்பேட்டை,<br>29—7—43.

**A. N. St. S. ரெத்தினசாமி தேவர்,**<br>மானேஜிங் டிரஸ்டி.<br>**N. சிவராமன்,**<br>மானேஜர்.

சிவகுகமயம்.

# முத்துப்பேட்டைத் தல வரலாறு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 8 NOV 1943 MAD

> "சிந்திப்பார் மனத்தவன் சிவன்செஞ்சடை
> அந்தி வாணிறத்தா னணியார் மதி
> முந்திச் சூடிய முக்கண்ணி னானடி
> வந்திப் பாரவர் வானுல காள்வரே"

மக்கள் விரும்புவது இன்ப நிலை. அவ்வின்பமும் என்றும் அழியா இன்பமாக இருத்தல் வேண்டும். அழியா இன்பம் பேரின்பம். பேரின்பம் பெற நிலைத்த பொருளிடத்து நேசம் வைத்தல் வேண்டும். நிலைத்த பொருள் இறைவன். நினைப்பவர் மனங் கோயிலாகக் கொள்வது இறைவன் இயல்பு. 'சிந்திப்பார் மனத்தகத்தான்' என்பதும் இக்கருத்தை வலியுறுக்கும். இவ்வாறு சிவனைச் சிந்திப்பார் எய்தும் பயன் இம்மையில் எல்லா இன்பங்களையும் எய்துதல். மறுமையில் வானுலகத்தினையும் ஆளலாம் என்பது இத்தேவாரம் அறிவிக்கின்றது. இறைவன் ஆன்மாக்களாகிய நம்மீது வைத்த பெருங் கருணையால் நாம் இடைவிடாது நினைந்துய்ய இடங்கடோறும் எழுந்தருளியுள்ளார். அத்தகைய தலங்கள் பலவற்றுள் செந்தமிழ் மந்திரமாகிய தேவாரங்கள் பெற்று விளங்குவன சில தலங்கள். தலங்களை விளக்கங்கண்ட சமயங் காத்த தலைவர்கள் ஒரு தலத்தைப்பற்றிப் பாடும்போது வேறொரு தலத்தின் அருமையும் நினைவில் வர அதனையும் வைப்பாகக்கொண்டு வழங்குவர். அங்ஙனம் இரு வகையாலும் விளக்கம் பெற்றன அன்றிச் சில தலங்கள் தன்னேரில்லாத் தன்மை பெற்றும் அவர்கள் அருட்பாடல்களைப் பெற்றிருந்தனவும் பலவுண்டு. பெறாதனவும் சில இருக்கலாம். அவற்றுள் முத்துப்பேட்டை என்னும் இத்தலம் தொன்மையுடையதாயினும் நாயன்மார்கள் பாடல் வளம் பெறாதது.

**தலம்:**—இத்தலம் முத்துப்பேட்டை எனவும், பேட்டையெனவும் வழங்கும். இது தஞ்சாவூர் ஜில்லாவில் திருத்தருப்

## பதிப்புரை

இச்சிறு நூல் வழிபட வரும் அன்பர்களின் வசதிக்காக ஆக்கப்பெற்றது. இந்நூலை வகுக்கும் வழிகாட்டியவர்கள், தமிழ்ப் பேரறிஞரும், கல் வெட்டாராய்ச்சியில் சரித்திர உண்மைகளைப் புதுக்கி வருபவர்களும் ஆகிய எமது இந்துமத அறநிலையப் பாதுகாப்பாளர் உயர்திரு ராவ்பகதூர் C. M. இராமச்சந்திரம் செட்டியார் அவர்கள் ஆவார்கள். அவர்களுக்கும் எழுதித்தந்த அறிஞர்க்கும் எங்கள் நன்றியுரித்தாகுக.

இங்ஙனம்,

A. N. St. S. ரெத்தினசாமி தேவர்,
மானேஜிங் டிரஸ்டி.
N. சிவராமன்,
மானேஜர்.

முத்துப்பேட்டை,
29—7—43.

சிவகுகமயம்.

# முத்துப்பேட்டைத் தல வரலாறு.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 NOV 1943
MAD

“சிந்திப்பார் மனத்தவன் சிவன்செஞ்சுடர்
அந்தி வானிறத்தா னணியார் மதி
முந்திச் சூடிய முக்கண்ணி னாதியை
வந்திப் பாரவர் வானுல கான்வரே”

மக்கள் விரும்புவது இன்ப நிலை. அவ்வின்பமும் என்றும் அழியா இன்பமாக இருத்தல் வேண்டும். அழியா இன்பம் பேரின்பம். பேரின்பம் பெற நிலைத்த பொருளிடத்து நேசம் வைத்தல் வேண்டும். நிலைத்த பொருள் இறைவன். நினைப்பவர் மனங் கோயிலாகக் கொள்வது இறைவன் இயல்பு. ‘சிந்திப்பார் மனத்தகத்தான்’ என்பதும் இக்கருத்தை வலியுறுக்கும். இவ்வாறு சிவனைச் சிந்திப்பார் எய்தும் பயன் இம்மையில் எல்லா இன்பங்களையும் எய்துதல். மறுமையில் வானுலகத்தினையும் ஆளலாம் என்பது இத்தேவாரம் அறிவிக்கின்றது. இறைவன் ஆன்மாக்களாகிய நம்மீது வைத்த பெருங் கருணையால் நாம் இடைவிடாது நினைந்துய்ய இடங்கடோறும் எழுந்தருளியுள்ளார். அத்தகைய தலங்கள் பலவற்றுள் செந்தமிழ் மந்திரமாகிய தேவாரங்கள் பெற்று விளங்குவன சில தலங்கள். தலங்களை விளக்கங்கண்ட சமயங் காத்த தலைவர்கள் ஒரு தலத்தைப்பற்றிப் பாடும்போது வேறொரு தலத்தின் அருமையும் நினைவில் வர அதனையும் வைப்பாகக்கொண்டு வழங்குவர். அங்ஙனம் இரு வகையாலும் விளக்கம் பெற்றன அன்றிச் சில தலங்கள் தன்னேரில்லாத் தன்மை பெற்றும் அவர்கள் அருட்பாடல்களைப் பெற்றிருந்தனவும் பலவுண்டு. பெறாதனவும் சில இருக்கலாம். அவற்றுள் முத்துப்பேட்டை என்னும் இத்தலம் தொன்மையுடையதாயினும் நாயன்மார்கள் பாடல் வளம் பெறாதது.

**தலம்:**—இத்தலம் முத்துப்பேட்டை எனவும், பேட்டையெனவும் வழங்கும். இது தஞ்சாவூர் ஜில்லாவில் திருத்தருப்

பூண்டி தாலுகாவில் உள்ளது. திருத்தருப்பூண்டியிலிருந்து அறந்தாங்கிக்குச் செல்லும் புகைவண்டி நிலையில் இறங்கிச் செல்லலாம். மற்றும் மோட்டார் வசதிகளும் உண்டு. முத்துப்பேட்டை ஸ்டேஷனிலிருந்து கோவில் தெற்கே சுமார் ஒரு மைல் தூரம் இருக்கும். மோட்டார் நிலையிலிருந்து $\frac{1}{2}$ மைல் தூரம் இருக்கும். திருக்கோயிலுக்கு மேற்கே சுமார் ஒரு மைல் தூரத்தில் பாமணியாறும், கிழக்கில் இரண்டு பர்லாங் தூரத்தில் கோரையாறும் பாய்கின்றன. இங்குப் பத்திரப் பதிவு நிலையமும் (சப் ரிஜிஸ்தரார் ஆபீஸ்) ஊர்க்காவல் நிலையமும் (போலீஸ் ஸ்டேஷன்) இருக்கின்றன. இங்குள்ள மக்கள் தொகை சுமார் 4000. இவர்களிற் பெரும்பாலோர் விவசாயிகளே. சிறுபான்மை கடற்றொழிலாளர்களும் வசிக்கின்றனர். இங்கு முஸ்லீம்களும் மிகுதி. தேங்காய்; கீற்று ஏற்றுமதி மிகுதியாக நடைபெறுகின்றது. தட்பவெப்ப நிலை 98°. பேட்டைக் கோயிலிலிருந்து தெற்கே ஐந்து மைல் தூரத்தில் வங்காளக் குடாக்கடல் இருக்கின்றது. வேதாரணியம் கோடியக்கரைக் காட்டின் தொடுவாய் இதுவரையில் இருக்கின்றது. பேட்டைக்குச் சமீபமான கோரையாற்றின் கீழ்க்கரையிலும் அடர்ந்த சிறு காடுகள் உண்டு. தக்கவர்கள் வந்தால் தங்க புகை வண்டி நிலையத்திற்கு அருகாமையில் ஒரு 'பங்களா' உண்டு. மற்றவர்கள் தங்கத் தனி வசதியான கட்டிடங்கள் இல்லை.

**சுற்றியுள்ள தலங்கள்:**—பேட்டை கோயிலுக்கு வடக்கில் சுமார் 2 மைல் தூரத்தில் திருவுசாத்தானம் என்னும் கோவிலூரும், வடகிழக்கில் 4 மைல் தூரத்தில் தில்லைவளாகமும், மேற்கே 5 மைல் தூரத்தில் தம்பிக்கோட்டையும் இருக்கின்றன. அவற்றுள் திருவுசாத்தானம் திருஞானசம்பந்தப் பெருமான் திருப்பாடல் பெற்றது. இராமனுக்கு மந்திரோபதேசம் செய்த தலம். ராஜராஜன், ராஜேந்திரன், குலோத்துங்கன் முதலிய சோழ அரசர்களாலும், மாறவர்மன் என்னும் பாண்டிய மன்னனாலும் அன்பு செய்யப்பெற்ற சிறந்த தலம். தில்லைவளாகம் அணுமையான காலத்துக் காணப்பெற்ற தலம். சிற்பத்திறம் செறிந்த—உயிர் ஓவியமான—கண்டோர் கண்வழி கருத்துட் பதிந்து மீளாத உருவுடைய இராமன், சீதை, இலக்குவன் ஆகிய திருவுருவங்கள் அமைந்தது. மற்றும் அங்கு எழுந்தருளியுள்ள நடராசப் பெரு



மான் திருவுருவம் மிக அழகியதாக அமைந்துள்ளது. தில்லைவளாகம் என்னும் தலப் பெயரும் நடராசப் பெருமான் அமைந்த பொருத்தமும், இவற்றையெல்லாம் வழியிடைக்கண்டு சென்ற ஞானசம்பந்த வள்ளல் 'தில்லையான் உறைவிடம் திருவுசாத்தானமே' என்று அங்குக் குறிப்பிடுவதும் கண்டின்புறுதற்குரியன, இவ்வாறாக இத்தல வழிபாட்டிற்கு வருவோர் கடல், காடு முதலிய இயற்கையழகுகளைக் கண்டின்புறலாம். மற்றும் சுற்றுத் தலங்களையும் தொழலாம். கோடியக்கரை வருவோர் பெரும்பாலும் இத்தலங்களை வழிபட்டுச் செல்லுதல் வழக்கமாக இருக்கின்றது.

**கோயில்:**— கோயில் சிறியது. கோபுரம் கோயிலுக்கு ஏற்றாற்போல ஐந்து நிலைகளையுடையது. கோபுரம் 55 அடி உயரம் உள்ளது. இத்திருக்கோயில் தென் வடக்கில் $83\frac{1}{2}$ அடிகளும், கிழமேல் 159 அடிகளும் உள்ளது. கோயில் கிழக்குப் பார்த்தது. ஒரே சுற்றுலை (பிரகாரம்) உடையது. கோயிலைச் சுற்றியுள்ள மடவிளாகமே திருவீதி. தூலலிங்கமாகிய கோபுரத்தை வணங்கியுட்புகுந்ததும் மகாமண்டபம், அர்த்தமண்டபம் முதலியன அடுக்கடுக்காக அமைந்துள்ளன, திருந்திய கருங்கற்றிருப்பணி.

**மூர்த்தி:**— கருப்பக்கிருகத்துள் சிவலிங்கப்பெருமான் கிழக்கு நோக்கி எழுந்தருளிக் காட்சி வழங்குவர். அவர் திருநாமம் **திருமேனியழகர்** என்பது. வடமொழியில் **சௌந்தரேசர்** என வழங்குகின்றது. சிவலிங்கப்பெருமான் அழகும், ஒளியும் அமைந்து காண்பார் கருத்தில் திருமேனியழகர் என்னும் திருப்பெயரை நிலைநாட்டும். இறைவனுக்கு இடது பக்கத்தில் அம்மன் சந்நிதி இருக்கிறது. அம்மை சந்நிதி தெற்குப் பார்த்தது. அம்மை திருநாமம் **வடிவழகி** என்பது. வடமொழியில் **சௌந்தரநாயகி** என்று வழங்குகிறது. அம்மை உலகத்தாயாதலின் தாய்க்கேற்ற தன்மையுடன் விளங்குகின்றார். அம்மை கண்கண்ட தெய்வமாகப் பலராலும் நேர்த்திக்கடன் பெற்று விளங்குகின்றார். இப்பகுத்து ஆடவர்கள் திருமேனி என்றும், பெண்மக்கள் வடிவழகியென்றும் பெயரிட்டுக் கொள்ளும் வழக்கம் மிகுதியும் இருப்பது கடவுளன்பைக் காட்டும். சுவாமி திருமுன் தென்புற பிராகாரத்தில் திருத்தொண்டர் திருவுருவங்களும், ஞானசம்பந்தப்பெருமான், அப்பாடிகள், சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசகர் ஆகிய நால்வர் எழுந்தருளுந் திருமேனியாக இருந்தருள் செய்கின்றனர். இவர்கள்

வரிசையில் குன்றத்தூர் கிழாராகிய பெரிய புராண ஆசிரியர் தெய்வக்கவி சேக்கிழார் பெருமானும் எழுந்தருளுந் திருமேனியில் இருக்கின்றார். மேலண்டைப் பிராகாரத்துத் தென்கோடியில் தல விநாயகர் இருக்கின்றார். அவர் திருநாமம் **கற்பக விநாயகர்** என்பது. அதனையடுத்து சோமாஸ்கந்தரும், அம்மையும் அமர்ந்திருக்கின்றனர். அடுத்து ஒரு சிவலிங்கத் திருமேனியுள்ளது அதன் திருநாமம் கைலாஸநாதர் என்பது. அம்மை நித்தியகல்யாணி. அடுத்து கூத்தாடும் பிள்ளையாரும், முருகனும், திருமகளும் திகழ்கின்றனர். முருகன் இரு பெருந்தேவியரோடு 'இளையாய் அழகியாய்' என்று புலவர் பெருமகனார் அழைத்த அழைப்பிற்கேற்ப அழகான திருமேனி கொண்டிருக்கிறார். அவருக்கு இத்தல வாசிகளிற் பலர் வெள்ளிக்கிழமை கார்த்திகை முதலிய நாட்களில் சிறந்த பூஜை செய்வித்துப் பெறும்பேறு எய்தி வருகின்றனர். அம்மன் சந்நிதிக்குக் கீழண்டைப் பக்கத்து ஆனந்த நடராசப்பெருமான் எழுந்தருளியுள்ளார். அவர் பக்கத்துச் சிவகாமியம்மை சேர்ந்திருக்கின்றார்கள். இத்திருக்கோயிலுக்கு உரிய தீர்த்தம் **தாமரைக்குளம்** என இப்போது வழங்கிவருகிறது. பொதுமக்கள் குடிநீர் முதலிய வசதிக்கேற்ற நல்ல தண்ணீர்க் குளம். ஆதலால் இது தீர்த்தமாக மட்டும் பயன்படாது உள்ளும் புறம்பும் ஒத்துப் பயன் பெறுகிறது. கோயில் புதிய திருப்பணியாதலின் சிறந்த சிற்பத்திறங்கள் காணப்பெறவில்லை. தலவிருட்சமும் இன்னதென்று அறியக்கூடவில்லை.

***சுற்றுக்கோயில்:***—இத்தலத்து கிராம தேவதைகளான ஐயனார், பிடாரி, மாரியம்மை, காளியம்மை முதலியவர்களுக்குக் கோயில்கள் இருக்கின்றன. இங்கு ஒரு சிறந்த பெருமாள் கோயிலும் உண்டு. இது கிராமப் பொதுவில் உள்ளது. சுவாமி திருநாமம் **ஸ்ரீ முத்துராஜகோபாலன்** என்பது. சந்நிதி கிழக்குப்பார்த்தது. உபய நாச்சியார் திருக்கோலம். திருநாமம் **ருக்மணி சத்யபாமை**. இதுவும் ஆழ்வார்களால் பாடல் பெறாதது. இதற்குத் தனித் தீர்த்தம் உண்டு. இதற்குப் **பெருமாள் திருக்குளம்** என்றே பெயர்.

***புராண வரலாறு:***-இத்தலத்திற்கு மேற்கேயுள்ள திருவுசாத்தானத்திற்கு இராமனும் இலக்குமணனும் வசிட்டரிடம் மந்



திர உபதேசம் கேட்க வந்தனர். அவர்களுடன் நீரா நட்புக்கொண்டு உடன் பிறப்பாகவும் ஆகி "குன்று சூழ்வான் மகனொடும் அறுவரானோம்" என்று ராமன் வாயிலாகக் கம்பராற் பாராட்டப்பெற்ற சுக்ரீவன் தானும் சிவ பூசை செய்ய எண்ணி இத்தலத்திற்கு வந்து சிவலிங்கப்பெருமானையும் அம்மையையும் சிவாகம விதிப்படி நிறுவி வழிபட்டான். மெய்மறந்து இறைவனருட் குணங்களைத் தோத்தரிக்கின்றவன் 'திருமேனியழகனே' என்று கூறினன். அதுமுதல் இறைவன் திருநாமம் திருமேனியழகர் என்றும் அம்மை வடிவழகியென்றும் வழங்கப்பெற்றனர். இத்தலத்துக்குத் தனியாக புராணம் இல்லை. ஆயினும் திருவுசாத்தானப் புராணத்து மூன்று பாடல்கள் இத்தல வரலாற்றுக் குறிப்பை ஒருவாறு அறிவிக்கின்றன.

***அபிஷேகம்—அர்ச்சனை முதலாயின:***— இத்தலத்து அம்மை சிலருக்குக் குலதெய்வமாக இருப்பதால் அபிஷேக அர்ச்சனை மிகுதியும் நடைபெறுகின்றன. சித்திரைப் பிறப்பு முதலிய மாத விசேட நாட்களிலும், சிவராத்திரி முதலிய ஆண்டு விசேட நாட்களிலும் மகாபிஷேகங்கள் நடைபெறும்.

175597

***நித்ய பூசை:***—நாடோறும் விடியற்காலை திருவனந்தல் பால் நைவேத்தியமும், ஐந்து கால பூசைகளும் நடைபெறுகின்றன. காலசந்தியில் மட்டும் சுவாமி அம்பாள் பரிவாரங்கள் எல்லோருக்கும் அபிஷேகம் நடைபெறும். சாயரட்சை சுவாமிக்கும் அம்பாளுக்கும், அர்த்த யாமத்தில் சுவாமிக்கு மட்டும் அபிஷேகம் நடைபெறுகிறது. சுவாமிக்கு சாயரட்சை, இரண்டாம் காலம் ஆகிய இரு காலங்களில் மட்டும் அலங்கார சோடசோபசார தீபாராதனைகள் நடக்கும். செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் மட்டும் அம்மைக்குத் தனியாக பதினாறு வகையான உபசாரங்களும் நடக்கும். சுவாமிக்கு சாயரட்சையில் உருத்திர திரிசதையும், இரண்டாம் காலத்தில் அம்மைக்கு லஸிதா திரிசதையும் ஆக இரண்டு அர்ச்சனைகள் தினந்தோறும் நடக்கின்றன.

***திருவிழா:***— மாதந்தோறும் கார்த்திகையிலும், பிரதோஷங்களிலும் சுவாமி புறப்பாடு உண்டு. புரட்டாசி மாதத்தில் விஜயதசமியன்று சுவாமி புறப்பட்டு அம்பு போடப் போகும்.

கார்த்திகை மாதக் கார்த்திகையிலும், மார்கழித் திருவாதிரையிலும் சோமாஸ்கந்தர் பரிவாரங்களோடு காட்சி வழங்குவர். திருவாதிரையில் தாமரைக் குளத்தில் 'நீர்விழா' (தீர்த்தம்) நடக்கும்.

**வாகனங்களும்—ஆபரணங்களும்:—** திருக்கோயிலுக்குச் சொந்தமாக 3400 ரூபாய் பெறுமானமுள்ள திருவாபரணங்கள் இருக்கின்றன. மரத்தாலான இடப வாகனங்கள் இரண்டும், மயில், குதிரை, மூஞ்சூறு வாகனங்களும், படிச்சட்டம் மஞ்சம் முதலியவைகளும் இருக்கின்றன.

**வரவு—செலவு:—** திருக்கோயிலுக்குச் சொந்தமாக நன்செய் சுமார் 400 ஏக்கரும், புன்செய் 800 ஏக்கரும், கடைகளும் வீடுகளும் இருக்கின்றன. இவற்றின் வருமானம் ஆண்டு ஒன்றிற்கு தற்காலக் கிரயப்படி சுமார் இருபதினாயிரம் ரூபாய் வரும். திருக்கோயிலின் நித்ய பூசைக்காக ரூ. 1700ம், உற்சவச் செலவிற்காக ரூ. 200ம், சிப்பந்தி சம்பளம் நிர்வாகச் செலவிற்காக ரூ. 2575ம், சர்க்கார் கிஸ்தி ரூ. 1850ம் போர்டு கட்டணம் ரூ. 250ம், இதர கிராமப்பண்ணை மராமத்து சிலவுகள் வகையறு ரூ. 2450ம் ஆக ரூ. 9025 செலவாகும். இங்கு அர்ச்சனை முதலியவற்றிற்குக் கட்டணம்விதிக்கப் பெறவில்லை.

**நிர்வாகம்:—** சென்னை இந்து அறநிலைப் பாதுகாப்பாளர்களால் Bo. No. 522, 11—5—1931ல் ஏற்பட்ட திட்டத்தின்படி இத்திருக்கோயில் பரிபாலிக்கப் பெறுகிறது. திருக்கோயிலை இந்த உயர்நிலைக்குக் கொண்டுவந்த நகரத்தார் சார்பில் ஒரு தர்மகர்த்தாவும், உள்ளூரில் இருவருமாக நியமிக்கப்பெற்று மூவரால் மேற்பார்க்கப் பெற்று வருகிறது. நாளும் கோவில் காரியங்களைக் கவனிப்பதற்கு 50 ரூ. சம்பளத்தில் ஒரு மானேஜரும் இருந்து வருகிறார். இப்போது தர்மகர்த்தர்களாக இருப்பவர்கள் ஜாம்புவானோடை வடகாடு An. St. S. இரத்தினசாமித் தேவர் அவர்களும், தில்லைவளாகம் பா. அ. அரு. தனிக்கோடித் தேவர் அவர்களும், வயிநாகரம் அமராவதிப்புத்தூர் வயி. நாக. ராம. வெ. ரும. சோமசுந்தரம் செட்டியார் அவர்களும் ஆவார்கள்.

**திருப்பணி:—** இத்திருக் கோயிலைத் திருப்பணி செய்தவர்கள் முத்தையாச் செட்டியார் என்பவர்கள். இவர்கள் தேவக்



கோட்டையில் நா. பெத்தாச்சி செட்டியார் என்பவர்கள் குமாரர். சிறந்த சிவபக்தர். முத்துப்பேட்டையில் ஏஜண்டாயிருந்து வியாபாரம் செய்துவந்தார். அன்பு மேலீட்டாலும், கோயிலில்லா ஊரில் குடியிருக்க மனமில்லாமையாலும் சீர்கேடடைந்த சிவாலயத்தைப் புதுக்க வேண்டும் என்ற உறுதிகொண்டார். 1868ம் ஆண்டில் தொடங்கிச் செங்கற் றிருப்பணியாக 1870ம் ஆண்டில் முடித்துக் கும்பாபிஷேகம் செய்வித்தார். திருமேனியழகர் இவர் நெஞ்சை இடமாக்கிக் கொண்டார். ஆதலால் இக்கோயிலின் வளர்ச்சியே தன் பொருள் வளர்ச்சியெனப் புத்தி செய்தார். 1878ம் ஆண்டில் கொழும்பு முதலிய இடங்களுக்குச் சென்று தனவைசியப் பெருங்குடி மக்களிடம் பெரும்பொருள் சேர்த்துக் கோட்டகம், நன்னிப்பள்ளம், கீழ்க்குறிச்சி, தில்லைவளாகம் முதலிய இடங்களில் வயலும், தென்னந் தோட்டமும் வாங்கிச் சேர்த்து நித்திய பூசை இடையறாமற் செய்ய ஏற்பாடுகள் செய்தார் பின்னரும் கோயிலைக் கருங்கற்றிருப்பணி செய்யக் கருதி சிங்கப்பூர், பினாங்கு முதலிய இடங்களுக்குச் சென்று யாசித்துப் பொருளீட்டி ரூ. 19000-யும் ராம. அரு. அரு. கடையில் சுவாமியின் பேரால் வரவுக்குக் கொடுத்து 1897ம் ஆண்டில் காசியிற் காலமானார். அவர் எண்ணப்படியே ராம. அரு. அருணாசலம் செட்டியார் அவர்களும், அவர்களுடைய இளைய புத்திரராகிய ஸ்ரீ சோமசுந்தரம் செட்டியார் அவர்களும் திருப்பணியை முற்றுவித்தனர். சென்ற ரௌத்திரி ஆண்டு, சித்திரை-மீ 13ம் நாள் (1920 ஏப்ரல்) மகா கும்பாபிஷேகமும் செய்வித்தனர். இத்திருப்பணிக் காலத்துக் காரைக்குடி மகா வித்துவான் ராம. சொக்கலிங்க ஐயா அவர்களால் முத்தையா மான்மியம் என்ற ஒரு சிறு நூல் எழுதி வெளியிடப்பட்டது. அதில் இவர் செய்த தொண்டுகள் யாவும் தெற்றென விளங்கப்பெற்றுள்ளன.

**இலக்கியம்:—** இத்தலத்தைப்பற்றிய இலக்கியம் ஒன்றேனும் இல்லை. ஆனால் மேற்குறித்த காரைக்குடி ராம. சொக்கலிங்க ஐயா அவர்கள் செய்த திருவுசாத்தான புராணத்து மூன்று பாடல்கள் மட்டும் காணப்பெறுகின்றன. தோத்திரப் பாடல்கள் நான்கும் உள்ளன. அவை இன்னாரால் பாடப்பெற்றதென்பது தெரியவில்லை.

அப்பாடல்கள்:—

பொன்னே நிகருந் திருமேனி யழக னெனும்பேர் பொதுவாக
மண்ணோர் முத்துப்பேட்டையெனும் வளமாநகரிற் சிறப்பாக
வென்னேகொடு நீவீற்றிருப்ப தியம்பாய் எமையாள் வடிவழகி
தன்னேர் நாத போதமய சவுந்தரேச தயாநிதியே

உமையை யொழிய உடலமுனக் குளதன் றதனால் உனக்கொரு
அமையுஞ் சோம சுந்தரனென் றதனாலுனது தாளநகர் [பேர்
கமைசீர் மதுரா புரியெனவும் கழறப்பெறுமோர் கவின்கொண்டு
சமையும் பெருமை யென் சொல்கேன் சவுந்தரேச தயாநிதியே

அம்மையைப்பற்றிய பாடல்கள்:—

இமைய வரையா மடப்பிடியே! யிமையும் வரையா மடப்பிடியே!
யிதனு லிடர்கள் விடப்பணியா யிடையின் றடர்த்தல் விடப்பணியாய்
முமையுந் தருதா ளம்புயத்தாய் மூளையைப் பொருதாளம்புயத்தாய்
மூடனேனே னின்னடித் துணையே முற்றும் பணிவானடித்துணையே
கமைசீர் தரள நகரிடத்தாய் கணகந்த ரத்ந நகரிடத்தாய்
கண்ணே மணியே மணிப்பாவாய் கனியன்பினர்த மணிப்பாவாய்!
சமைய மெவைக்கும் மருந்தாயே சாமுன்னெழிக்கு மருந்தாயே
தக்கார் நுகரும் வடிவழகி சகலசிவ தயாநிதியே!

சிவநேயப் பெரியோர்களே! இத்தலம் அருட்பாடல்களைப் பெறாதது ஆயினும், நெஞ்சம் நெக்கு நினைப்பவர்க்கு நேர்ந்த பயன்கள் யாவையும் கொடுக்கும் தலமாயும், மூர்த்தி விசேடம் பொருந்தியதாகவும் உள்ளது. இதனை வழிபட்டு இருமையின்பமும் எய்துவோமாக.

175597


PROTECTS YOU
DELIVERY
7 /43
10 A.M.
HEDHAL-MA


YOU